# வெற்றியின் சத்தம்

வெற்றி: 13 | ஆண்டு சந்தா: 100/- | தனிப்பிரதி: 10/- | பரிசு: 6 செப்டம்பர் 2024


29ஆவது ஆண்டில்....

VICTORIOUS MINISTRIES 29 ANNIVERSARY


சகோ. R. ஜான் ஜோசப்




**நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும்**
**ஒடுங்கிப்போகிறதில்லை,**
**கலக்கமடைந்தும்**
**மனமுறிவடைகிறதில்லை**

– 2கொரி. 4:8

# உங்களோடு சிலவார்த்தைகள்...

கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவரும் உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துகள். உங்களை அன்போடு விசாரிக்கிறேன். கர்த்தர் நல்லவர்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் இந்த மாதம் 28ம் தேதியோடு நம் வெற்றியின் ஊழியங்கள் 28 ஆண்டுகளை கடந்து 29வது ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்கிறது. அற்பமான ஆரம்பம், அசட்டை செய்யப்பட்ட நாட்கள், அதட்டப்பட்ட இடங்கள், ஆனால், அழைத்தவர் உண்மையுள்ளவர், **'கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளை நடத்தியது போல'** கர்த்தர் ஒருவரே இவ்வூழியத்தையும் அடியேனையும் நடத்தினார்.

கடந்த மாதம் இங்கிலாந்து தேசத்திற்கும் மற்றும் ஓமன் தேசத்திற்கும் சென்று ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் உதவி செய்தார். கனிநிறைந்த ஊழியங்களை தந்தார். அநேக சாட்சிகளை ஏற்படுத்தி தந்தார், உங்கள் ஜெபத்திற்கு மிக்க நன்றி!

தொடர்ந்து நம் **விங்ஸ் ஆப் விக்டரி** சமூக பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்கள் உதவிகரத்தை நீட்டுங்கள். சென்னை பல்லாவரத்தில் துவங்கவிருக்கும் முதியோர் இல்லம், இலவச டயாலிசிஸ் மையம், பரிசோதனை கூடம், வாழ்வாதார மையம் இவைகளுக்காகவும் ஜெபத்தில் தினமும் தாங்க உங்களை அன்போடு அழைக்கிறேன்.

வெற்றியின் ஊழியங்கள் மூலமாக நாம் கட்டிமுடித்த 32 சபைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். தொடர்ந்து 13 சபைகள் கட்டப்பட்டு வருகிறது, இன்னும் இந்த வருடத்திற்குள் 50 சபைகளை நாம் கட்டி முடிக்க வேண்டும். ஜெபியுங்கள், உங்கள் சார்பில் ஒரு சபையை கட்ட முன்வாருங்கள். உங்களுக்காகவும் நான் ஜெபிக்கிறேன்.

தேவகிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக.



**கிறிஸ்துவின் வல்லப்பணியில்**
**உங்கள் சகோதரன்,**
**R. ஜான் ஜோசப்**

VICTORIOUS MINISTRIES 29 ANNIVERSARY



# வெற்றியின் செய்தி



**“நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை” 2கொரி. 4:8**

**சகோ. R. ஜான் ஜோசப்**

அன்பு வாசகர்களே! உங்களை வாழ்த்துகிறேன். நம் வாழ்க்கையில் நெருக்கங்களும் கலக்கங்களும் ஏதோ ஒரு வகையில் தலைகாட்டதான் செய்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெரும்பாலானோர் கலக்கமடைந்து சோர்ந்து போய்விடுகிறதுண்டு.

இந்நாட்களில் நாம் கேள்விப்படுகிற போர் செய்திகளும், பூமி அதிர்ச்சிகளும், நிலசரிவுகளும், பலவிதமான இயற்கை சீற்றங்களும் கூட நம்மை பயமுறுத்தி கலக்கங்களை கொண்டு வரலாம். அதுபோல அநேகர் எதிர்காலத்தை நினைத்து, தொழிலை நினைத்து, பொருளாதார நிலையை குறித்து கலக்கம் அடைந்து, நாம் எப்படி நன்மையை பெற முடியும் என்று சோர்ந்து போய் இருக்கலாம். கலங்க வேண்டாம்.

இஸ்ரவேலரை பார்த்து கர்த்தர் **“இஸ்ரவேலரே, கேளுங்கள்: இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ் செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம்”** (உபா 20:3) என்று சொல்லுகிறார்.

ஆம்! உங்கள் இருதயம் துவள வேண்டாம். உங்கள் எதிர்காலம் நம் ஆண்டவரின் கையில் இருக்கின்றது என்பதை மறக்க வேண்டாம். அது நம் கையில் இருப்பதால் தான் நாம் அதை கையால முடியாமல் தடுமாறுகின்றோம். இயேசு நம்மை நடத்த வல்லவராயிருக்கிறார்.

வேதத்தில் பல பரிசுத்தவான்கள் தங்கள் வாழ்க்கையில் பல நெருக்கங்களின் மத்தியிலும், கைவிடப்பட்ட சூழ்நிலையிலும் மனம் துவளாமல், சோர்ந்து போகாமல் ஜெயித்து



காட்டியுள்ளார்கள். அவர்கள் எப்படி ஜெயித்தார்கள் என்று இம்மாதம் தியானிப்போம்.

## 1. ஜெபித்து துதித்து ஜெயிக்கலாம்

**"நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்."** *அப் 16 : 25*

பவுலின் ஊழியங்களில் பிலிப்பு பட்டணத்தில் நடந்த எழுப்புதல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் நடந்த அற்புதங்கள் அவர்களை கலங்கடித்தது. எனவே பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் தொழுமரத்தில் மாட்டிவைக்கப்பட்டார்கள். விடிந்தால் எதுவும் நடக்கலாம். ஆனால் பவுலும் சீலாவும் இந்த சூழ்நிலையில் சோர்ந்து போகவில்லை.

அடித்ததினால் வலி இருந்திருக்கும், காயம் ஏற்பட்டு இருக்கும், தொழுமரத்தில் மாட்டப்படுதல் என்பது அவர்களை சித்தரவதை செய்வதன் அறிகுறி. ஆனால் பவுலும் சீலாவும் எதிர்காலம் என்னவாகும், தேவன் தானே ஆசியாவிற்கும் போகவிடாமல், பித்தினியா தேசத்திற்கும் போகவிடாமல் தடுத்து இங்கே கொண்டு வந்து நம்மை இப்படி அடிவாங்கவும், சிறையில் தொழுமரத்தில் தொங்கவிடப்படவும் விட்டுவிட்டாரே என்று முறுமுறுத்து அழுது புலம்பாமல், மனம் துவளாமல் கர்த்தரை துதிக்கவும், ஜெபிக்கவும் செய்கின்றனர்.

அன்பரே! நீங்களும் நம்பிக்கை இழந்து விட்டீர்களா? ஏன்? எதற்கு? எப்போது? என்றெல்லாம் புலம்பி உலகத்தாரை போல வாழுகின்றீர்களா? சோர்ந்து போகாதீர்கள். இந்த சூழ்நிலையை மாற்றுவதற்கு முதலில் நீங்கள் செய்ய வேண்டியது துதியும்,

ஜெபமும் தான். ஆம்! எந்த சூழ்நிலையிலும் நாம் தேவனை துதிக்க கடமைப்பட்டு இருக்கின்றோம்.

இம்மட்டும் நம்மை ஜீவனோடு பாதுகாத்து, பராமரித்து, போஷித்து, பக்குவமாக நடத்தி, பண்படுத்தி, புடமிட்டு தமது கிருபையினால் நடத்திக்கொண்டு இருக்கின்றாரே, நம் தேவனுக்கு நன்றி சொல்லாமல், அவரை துதிக்காமல் எப்படி இருக்க முடியும்.

அதுபோல, ஜெபிப்போம். பவுலும் சீலாவும் எதற்காக ஜெபித்து இருப்பார்கள்? சிறைச்சாலையில் தங்களோடு இருக்கின்றவர்களுக்காகவும்,தங்கள் உடன் ஊழியர்களுக்காகவும், எதிர்கால ஊழியங்களுக்காகவும், தங்களை அடித்தவர்களுக்காகவும், துன்பப்படுத்தியவர்களுக்காகவும் ஜெபித்திருப்பார்கள். அவர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபித்திருக்கலாம்.

ஆம்! "**இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்**" *சங் 22:3*. பவுலும் சீலாவும் துதித்து ஜெபித்ததினால் சிறைச்சாலையை அசைத்தார். இரட்சிப்பை கட்டளையிட்டார். சிறைச்சாலையில் பெலவீனப்பட்டு காயப்பட்டு இருந்த சூழ்நிலையிலும், ஜெபம் அவர்களை பெலனடைய செய்தது.

அன்பு சகோதர சகோதரிகளே, துதித்த யோசபாத் வெற்றிப்பெற்றான். அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும் என்ற தாவீது மேன்மை அடைந்தான். நீங்கள் உங்கள் நிலையை கண்டு மனம் துவளாமல் துதிக்க கற்றுக்கொள்ளுங்கள், ஜெபிக்க துவங்குங்கள். கர்த்தர் உங்களையும் பலப்படுத்தி நீங்கள் பெரிய வெற்றிகளை அடைய கிருபைதருவாராக.

## 2. கிறிஸ்துவின் அன்பினால் ஜெயிக்கலாம்

"**கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம்**






**நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே."** *ரோமர் 8:36, 37*

இரண்டாவதாக, பவுல் மனம் துவளாமல் வாழ காரணம் கிறிஸ்துவின் அன்பு. அதாவது, கிறிஸ்துவின் மேல் உள்ள அவரின் அன்பு. வேதம் சொல்லுகின்றது, **"கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்"** என்று *(2 கொரி 5:14)*. ஆம்! எந்த சிறையும் நம்மை மனம் துவள செய்யாமல் இருக்கவேண்டுமானால் சிறையிலும் அவரின் அன்பு நம்மை நெருக்க வேண்டும். அவரின் அன்பினால் எந்த ஒரு மனிதன் நிரப்பப்பட்டு இருக்கின்றானோ அவன் முறுமுறுக்காமல், மனம் துவளாமல் இருப்பான் என்பதற்கு பவுல் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

பிரியமான தேவ பிள்ளைகளே! நீங்கள் தேவ அன்பினால் நிரப்பப்பட்டு இருகின்றீர்களா? கிறிஸ்துவின் அன்பு உங்களை நெருக்கி ஏவுகின்றதா? கடைசி காலத்தில் வாழ்கின்றோம். கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிக்க பலர், பல சூழ்நிலைகள், பல பிரச்சனைகள், பல ஏமாற்றங்கள், பல தடுமாற்றங்கள் வர தான் செய்யும். அவைகளை ஜெயிக்க, அவைகளால் பாதிக்கப்படாமல் இருக்க ஒரே வழி கிறிஸ்துவின் அன்பு உங்கள் இருதயத்தை நிரப்ப விட்டுக்கொடுங்கள். வேதம் சொல்லுகின்றது. **"மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது"** *(ரோமர் 5:5)*.

இது எத்தனை அற்புதமான அனுபவம்! பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்மில் ஊற்றப்பட்டு இருந்தால் நிச்சயம் நாம் நம்பிக்கை இழக்கவோ, மனம் துவளவோ மாட்டோம். பவுல் மேலும் சொல்லுகிறார், **"தேவன்**

**நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்"** *2.தீமோ. 1:7.* *உங்கள் எதிர்காலத்தை குறித்து நீங்கள் பயப்படுகின்றீர்களா? உங்கள் வாழ்க்கையில் தெளிவற்ற நிலையில் இருக்கின்றீர்களா? உங்களுக்கு தேவை பலமும் அன்பும் தெளிந்த புத்தியும் உள்ள ஆவி. அந்த அன்பு எதையும் கண்டு கலங்க விடாது, சோர்வடைய செய்யாது, நீங்கள் சந்திக்கும் நெருக்கங்களினால் ஒடுங்கி போக தேவ அன்பு விடாது.*

*இந்நாட்களில் உங்கள் மேல் ஆண்டவர் வைத்திருக்கின்ற அன்பை எண்ணி மகிழுங்கள், அவர் மேல் உள்ள உங்கள் அன்பை அதிகப்படுத்துங்கள். உங்கள் அன்புக்கு நடுவில் யாரும் எதுவும் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். பவுல் ரோமர் 8:37ல் சொல்வது போல* **"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே"** *என்று சொல்லுவோமா? இது நம்முடைய அறிக்கையாகவும் மாறட்டும். நிச்சயம் நீங்கள் ஒடுங்கி போகாமல் ஜெயிக்க கர்த்தர் கிருபை தருவார்.*

## 3. கிறிஸ்துவின் பலத்தினால் ஜெயிக்கலாம்

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு."** *பிலிப்பியர் 4:13*

*பவுல் பிலிப்பியர் நிருபத்தை சிறையில் இருந்து எழுதினார் என்று நாம் அறிவோம். சிறைச்சாலையிலிருந்து எழுதப்பட்ட நிருபங்களில் பவுல் அழுது புலம்பியோ, தன் வேதனைகளை சபைக்கு தெரியப்படுத்தியோ, தேவனை கேள்விக்கேட்டோ எந்த வார்த்தையும் எழுதாமல், சபையை சந்தோஷமாயிருங்கள் என்று பிலி 3:1, 4:4 ஆகிய வசனங்களில் சொல்லுகின்றார். மாத்திரம் அல்ல, பிலி 4:6ல் எதிர்பார்க்காமல் ஜெபிக்க கற்றுக்கொடுக்கின்றார். என்னே அற்புதமான அனுபவம்!*

*அன்பு சகோதர சகோதரிகளே, இப்படி தன் சிறைச்சாலையின் அனுபவங்களில் பவுல் மனம் துவளாமல் இருக்க காரணம் அவர் கர்த்தருடைய பெலனினால் நிரப்பப்பட்டு இருந்தார். இப்படி சவால் நிறைந்த காலங்களில், தங்கள் கொஞ்ச பெலனையும்,*


திருவள்ளூரில்,

ஞாயிறு சிறப்பு ஆராதனை

8 செப்டம்பர் 2024

காலை 9 மணி

தேவசெய்தி

சகோ. R. ஜான் ஜோசப்

இடம்:

அப்போஸ்தல கிறிஸ்தவ சபை

13, அரோம் நகர், இராஜாஜிபுரம்,

திருவள்ளூர்.

ஒருங்கிணைப்பு:

Pr. M. பால் பாண்டியன்

90479 67545


Email: victoriousministriesjj@gmail.com

நம்பிக்கையையும் பலர் இழந்து விடுகின்றனர். இதற்கு காரணம் தங்கள் நிலையையும், தங்கள் குறைவுகளையும், தங்கள் தேவைகளையும், தங்கள் பிரச்சனைகளையும், தங்கள் பலவீனங்களையும் அதிகமாக சிந்திப்பதே.

ஆனால் பவுல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நிலையிலும் யாரிடமும் தன் தேவைகளையோ, தன் பிரச்சனைகளையோ, தன் குறைகளையோ சொல்லி மனம் துவளாமல், தன்னை பெலப்படுத்தும் ஒருவரை அவர் அறிந்துக்கொண்டார். அதனால் தான் சபையை சந்தோஷமாயிருங்கள் என்று சொல்ல முடிந்தது. ஆம் பிரியமானவர்களே! நாம் கர்த்தருடைய பெலனை பெற்றுகொள்ளவேண்டிய காலம் இது. அவர் பெலப்படுத்த நம்மை விட்டுக்கொடுக்க வேண்டிய நாட்கள் இது.

ஏசாயா 40:31–இல் **"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்"** என்று வாசிக்கின்றோம். குறிப்பிட்ட பருவத்தை அடைந்த கழுகு உயர்ந்த சிகரங்களில் சென்று, கன்மலை வெடிப்புகளில் தங்கி தன் ரோமங்களை பிடிங்கி போட்டு, தன் செட்டைகளை உதிர்த்து, தன் நகங்களையும், தன் அலகையும் பாறைகளில் மோதி உடைத்துப்போடும். அதன் பின் தனக்கு புதிய சிறகும், ரோமங்களும், நகங்களும், புது பெலனும் கிடைக்கும் வரை அது காத்திருக்கும், அந்நாட்களில் அது எந்த விபரீத முடிவுகளையும்

Web: www.victoriousmin.org / www.victorious-ministries.org


# காணத்தவறாதீர்கள்!

**நம்பிக்கை தொலைக்காட்சியில்...**

## வாலிப ஓட்டம்

**வாலிபர்களுக்காக சிறப்பு நிகழ்ச்சி**

ஒவ்வொரு சனிக்கிழமையும்
மாலை 4:00 மணி முதல்
4:15 மணி வரை.

**பைபிள் தொலைக்காட்சியில்...**

## வெற்றியின் சத்தம்

**நிகழ்ச்சி ஒளிப்பரப்பு செய்யப்படுகிறது.**

சனிக்கிழமை மாலை 6 மணி முதல்
6:30 மணி வரை.
புதன்கிழமை காலை 8 மணி முதல்
8:30 மணி வரை.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் அறிமுகம் செய்யுங்கள்!



எடுக்காது. மாறாக, தன்னை தன் சிருஷ்டிகர் பெலப்படுத்த காத்திருக்கும். அதன் பின்புதான் கழுகு செட்டைகளை அடித்து உயர எழும்பும்.

பிரியமானவர்களே! கழுகையே இத்தனை அழகாக நடத்தும் தேவன், நம்மை விட்டு விடுவாரா? நாம் காத்திருக்கும் நாட்கள் நாம் பெலப்படும் நாட்கள். புதிய பெலன் நமக்கு தேவை, இனி வரபோகின்ற நாட்களை சந்திக்கவும், சாதிக்கவும், ஜெயிக்கவும் பழைய பெலன் போதாது. பிரச்சனைகளை பேசி, யோசித்து, எதிர்பார்த்து பெலனை இழந்து இருக்கலாம். ஆனால் இந்நாட்களில் கர்த்தருடைய பெலனை பெற்றுக்கொள்ள பிரயாசப்படுங்கள். சங் 89:21–இல் **“என் கை அவனோடே உறுதியாயிருக்கும்; என் புயம் அவனைப் பலப்படுத்தும்”** என்று வாசிக்கிறோம். இது எத்தனை அற்புதமான அனுபவம். இந்த அனுபவத்தை நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.

பவுல் சொல்லுகிறார். 2.தீமோ. 2:1இல் **“ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு”** என்றும்,

எபே. 6:10இல் **“கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்”** என்றும்,

கொலோ. 1:11இல் **“சந்தோஷத்தோடே கூடிய எல்லாப்பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்”** என்றும் வாசிக்கின்றோம்.

நாம் கிருபையினாலும், வல்லமையினாலும், பலப்பட்டு

பொத்தூரில்,

இயேசுவே ஆதாரம் ஊழியங்களின்

**விடுதலை உபவாச ஜெபம்**

**14 செப்டம்பர் 2024**

**காலை 10 மணி**

**தேவசெய்தி**

**சகோ. R. ஜான் ஜோசப்**

**இடம்:**

**பெத்தேல் ஆசீர்வாத மையம்**

பெரியார் நகர், லஷ்மிபுரம், பொத்தூர்.

**ஒருங்கிணைப்பு:**

**இயேசுவே ஆதாரம் ஊழியங்கள்**

**99400 18988**

இருக்கின்றோமா? அப்படி இல்லையென்றால் இம்மாதம் நாம் சார்ந்து இருக்கின்ற எல்லா பழைய காரியங்களையும் களைந்து விட்டு, புதிய பெலனை பெற்றுக்கொள்ள தீர்மானிப்போம்.

கர்த்தரோடு இசைந்து வாழக்கூடியவர்களால் மாத்திரமே அவரால் பெலப்பட முடியும். அவருடைய பெலன் நம்மோடு இருக்குமானால் பவுலை போல நாமும் சொல்லலாம், **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு"** *(பிலிப்பியர் 4:13)* என்று. நீங்களும் பயமின்றி, தைரியமாக கிறிஸ்துவின் பெலத்தினால் எதிர்காலத்தை மேற்கொள்ள முடியும்.

பிரியமான தேவ பிள்ளைகளே! இம்மாதம் உங்கள் மனதை துவள விடாதேயுங்கள். நாம் உலகத்தார் அல்ல, நாம் கிறிஸ்துவை உடையவர்கள், ஜெயிக்க பிறந்தவர்கள், உங்களின் மனதை துவள வைக்க யாருக்கும் அதிகாரம் இல்லை. நீங்களும் ஜாக்கிரதையாக இருந்து, ஜெபித்து, துதித்து, அவரின் அன்பினால் நிரப்பப்பட்டு, அவரின் பெலத்தினால் நிரப்பப்பட்டு தைரியமாக முன்னேறி செல்லுங்கள். உங்களின் சகல தேவைகளையும் கர்த்தர் சந்தித்து, உங்களுக்கு சகல கிருபைகளையும் கட்டளையிடுவார். ஆமென்.





வெளிவந்துவிட்டது!

**உவமைகளில் முத்துகள்**

(தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)

**உங்கள் பிரதிக்கு 9789054777 என்ற எண்ணை தொடர்புக்கொண்டு உறுதிப்படுத்தவும்.**




**விலை ரூ.80/–**

**சென்னை – ரூ.45/–, பிற பகுதிகள் – ரூ.80/–**
**கூரியர் கட்டணம் தனி.**

■ தொகுப்பு: சகோ. ஞான சுதர்சன்

*Bible and Science*

# புறாவுடன் ஒரு பிரஸ் மீட்



விஞ்ஞானம்-7

நன்றி: இடிமுழக்க ஊழியங்கள்

**திருவாளர் வரும் நேரத்தை எதிர்நோக்கி ஆயத்தமாகி கொண்டிருக்கும் போது, சட்டென்று நுழைந்தார், திருவாளர்.**

**திருவாளர்:** ரொம்ப பிசியா வேலை பார்த்துட்டு இருக்கீங்க போலிருக்கே?

**நிருபர்:** எல்லாம் உங்களை எதிர்பார்த்து தான்... இன்றைக்கு என்ன விஷயம் சொல்லப் போறீங்க?

**திருவாளர்:** படைப்புகளைப் பற்றின அறிவியலை தான் சொல்ல போறேன்.

**நிருபர்:** ஆதியாகமம் முதல் அதிகாரத்தில், ஆறு நாள்ல கர்த்தர் படைத்தவைகளை பற்றிய படைப்பின் வசனங்களை பார்க்கிறோமே! அதை பத்தி தான் சொல்லப் போறீங்களா?

**திருவாளர்:** ஆமாம். பொதுவாக காணப்படுகிற சில கருத்துகளை தான் நம்ம வாசகர்களுக்கு தெளிவுபடுத்தலாம் என்று நினைக்கிறேன்.

**நிருபர்:** சரி சொல்லுங்க.

**திருவாளர்:** ஆதியாகமம் முதல் இரண்டு வசனங்களுக்கு இடையே ஒரு பெரிய சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும். அல்லது ஒரு கால இடைவெளி இருக்க வேண்டும் சிலர் சொல்லுவார்கள். இதனை Gap Theory என்று சொல்லுவார்கள். இக்கொள்கை முற்றிலும் தவறானது.

**நிருபர்:** தேவன் ஆறு நாளில் அனைத்தையும் படைத்தார்

என்று வசனம் தெளிவாய் சொல்லும்போது, நாம் சில கொள்கைகளை திணிப்பது தவறுதானே.

**திருவாளர்:** ஆமாம். ஆனால் இதை சரியாக விளங்கிக் கொள்வோமானால் அனைவரும் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

**நிருபர்:** அப்போ புரியிற மாதிரி சொல்லுங்க.

**திருவாளர்:** முதலாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, இரண்டு வசனங்களும் தனித்தனி வசனங்கள் கிடையாது. ஒரு வசனத்தின் தொடர்ச்சியே மறு வசனத்தின் துவக்கம். ஏனெனில் and என்ற இணைப்புச் சொல் அடுத்த வசனத்தின் துவக்கத்தில் வருகிறது. எனவே ஒருமித்த வாக்கியத்தின் நடுவில் கால இடைவெளி இருக்கலாம் என்று யூகிப்பது தவறானது. அப்புறம் பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது என்ற வார்த்தையின் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

**நிருபர்:** ஆமாம், பொதுவாக கடவுளின் படைப்பு ஒழுங்கற்றதாக இருக்காது என்று சொல்லிதான் இந்த வசனங்களுக்கு இடையே ஏதோ நடந்துள்ளது என்று சொல்வார்கள்.

**திருவாளர்:** சரியா சொன்னீங்க. ஆனால் வசனம் சொல்லப்பட்டதின் கருத்து சிருஷ்டிப்பின் படிநிலையைச் சார்ந்தது.

**நிருபர்:** கொஞ்சம் தெளிவா சொல்லுங்களேன்.

**திருவாளர்:** ஒரு சிற்பி ஒரு சிலையை வடிவமைக்கும் போது துவக்கத்திலேயே கண் மூக்கு வாய் என்று செதுக்கிவிடமாட்டார். முதலாவது ஒரு பாறையை, தான் வடிவமைக்கும் சிலையின் அளவிற்கு ஏற்ப மேலோட்டமாக செதுக்கி, வடிவத்திற்கு ஏற்ற அளவை கொண்டு வருவார். பின்பு தனித்தனியாக மற்றவைகளை மிக கவனத்தோடு வடிவமைப்பார். சிலையின் தலைப்பகுதிக்கு வரும்போது முகத்தை தவிர்த்து மற்ற காரியங்கள் எல்லாம் செதுக்கிய பின் முகத்தின் உறுப்புகள் மற்றும் முகபாவனையை வடிவமைப்பார். அதுபோல தான் முதல் நாளில் பூமி உருவாக்கப்பட தேவையான அனைத்து மூலகங்களையும் கடவுள் உருவாக்கினார். அது நாம் தற்போது காண்கிற பூமியை போன்று வடிவமைக்கப்படவில்லை.

**நிருபர்:** நீங்க சொல்றத பார்த்தா முதல்ல உலகத்தை படைச்சுட்டு, அப்புறமா அத அழகு படுத்தின மாதிரி இருக்கே.

**திருவாளர்:** கிட்டத்தட்ட அப்படிதான். ஆனால், அழகு அல்ல ஒழுங்கு.

**நிருபர்:** சரி, சரி, ஒரு வார்த்தை மிஸ் ஆயிட்டா உடனே சொல்லி காட்டுவீங்களே...

**திருவாளர்:** சரி. படைக்கப்பட்ட பூமி வெறுமையாக இருந்தது. அதாவது உயிர்கள் இல்லை. உயிர் வாழ்வதற்கு ஏற்ற சூழலை கர்த்தர் ஒழுங்குப்படுத்துகிறார். அதே வேளையில் ஆழத்தின் மேல்

இருள் இருந்தது என்று வாசிக்கிறோம். இது தீய சக்தி அல்ல. அங்கு வெளிச்சம் இல்லை என்பதை குறிக்கிறது.

"Tehom" என்ற எபிரேய வார்த்தை, “ஆழத்தில்” என்ற பதத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஜலத்தின் ஆழத்தைக் குறிக்கிறது. தேவன் பூமியை உருவாக்கின போது சிருஷ்டிப்புக்கு தேவையான மூலகங்கள் எல்லாம் இந்த தண்ணீரில் நிறைந்து இருந்திருக்க வேண்டும். மேலும் இந்த தண்ணீரில் இருந்து தான் பூமி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை 2.பேதுரு 3:5ல் “ஜலத்தினின்று தோன்றி, ஜலத்தினால் நிலை கொண்டிருக்கிற பூமி” என்ற வார்த்தையினால் அறியலாம்.

**நிருபர்:** அறிவியல் குறித்த ஆழங்கள் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது!

**திருவாளர்:** ஆமாம். ஆச்சரியமானவர் ஆச்சரியமானவைகளை செய்கிறார். ஆனால் பூமியும் தண்ணீரும் தன் வடிவத்தைப் பெறவில்லை. ஒலி, ஒளி சக்திகள் பூமியில் உருவாகவில்லை. புவியீர்ப்பு விசையோ எந்த வித சுழற்சியோ உருவாக்கப்படவில்லை. அடுத்தடுத்த நாளில் ஆகாய விரிவை உண்டு பண்ணி, ஜலத்தைப் பிரித்தும், வெட்டாந்தரை காணப்படவும், சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்ற பெயரை வைத்தும் ஒழுங்கு படுத்துகிற படிநிலைகளை செய்கிறார். பின்பு தான் மரங்கள் சகலவித புல் பூண்டுகளை முளைப்பிக்க செய்து மூன்றாம் நாள் படைப்புகளை நிறைவு செய்கிறார்.

**நிருபர்:** அப்போ பூமி உருவாக்கப்பட்ட பின்பு, அடுத்த இரண்டு நாட்கள் பூமியை ஒழுங்குப்படுத்த அது சம்பந்தப்பட்ட காரியங்களை படைத்துள்ளார்.

**திருவாளர்:** ஆமாம். மேலும் ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்ற வசனத்தில் ஆவியானவருக்கு "Ruach" என்ற தேவனுடைய ஆவியை குறிக்கும் வார்த்தையும், அசைவாடி என்பதற்கு உபாகமம் 32:11இல் கழுகு தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி என்ற வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "Rachaph" என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அசைவாடுதலுக்கு இணையான கிரேக்க வார்த்தை "Phero" ஆகும்.

"தேவனுடைய மனிதர்கள் பரிசுத்த ஆவினால் ஏவப்பட்டு பேசினார்கள்" என்ற வசனத்தில் உள்ள "ஏவப்பட்டு" என்ற பதத்தை இது குறிக்கின்றது. ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடி உலகத்தை நிலைபெற செய்தார். அதுபோல தேவனுடைய மனுஷர்கள் அசைவாடி நம் ஆவிக்குரிய வாழ்வை நிலைபெற செய்யும் வார்த்தைகளை தந்தருளினார்கள்.

**நிருபர்:** அசைவாடுதல் என்ற ஒரு வார்த்தையில் எவ்வளவு மகத்துவங்கள் அடங்கி இருக்கு.

**திருவாளர்:** அது மாத்திரமல்ல. உலகில் உள்ள ஒலி, ஒளி, வெப்ப சக்திகள் உருவாக ஒரு அசைவாடுதல் தேவைப்படுகிறது. ஆனால் ஆவியானவர் தானாகவே அசைவாடக் கூடியவர். தன் அசைவாடுதலில் படைப்புகளை ஒழுங்குப்படுத்தினார். தன் அசைவாடுதலில் இருளை நீக்கி வெளிச்சத்தை உண்டு பண்ணினார்.

**நிருபர்:** Bible-ல ஆரம்பிச்சு Physicsல முடிக்குறீங்க.

**திருவாளர்:** அறிவியல் நிறைந்தது தானே கடவுளின் படைப்பு. உலகம் உருவாக Time, Space, Matter, Force, motion என்ற ஐந்து காரியங்கள் அவசியம் என்று Herbert Spencer என்ற அறிவியல் அறிஞர் சொல்கிறார். இவரின் கூற்று வேதத்தோடு ஒத்துப்போகிறதை கவனிக்கலாம். Time - காலம் – ஆதியிலே, Space - வெளி – வானம், Matter - வஸ்து – பூமி, Force - உந்துவிசை – ஆவியானவர், motion - அசைவாடி – இயங்குதல்.

**நிருபர்:** அறிவியல் கூற்றுகள் வேதத்துக்கு உட்பட்டது என்பதற்கு வேதத்தின் ஆரம்ப வசனங்களே ஆதாரமாக விளங்குகிறது.

**திருவாளர்:** ஆமாம், தொடர்ந்து அடுத்த மாதமும் சுவாரசியமான காரியங்களை தியானிப்போம்.

***வெற்றியின் ஊழியங்களின் 29ஆம் ஆண்டுக்கு வாழ்த்துகளை சொல்லி சிறகுகளடித்து பறந்தார், திருவாளர்.***





■ சகோதரி மேரி ஜவஹர்

# வேத வினாப் போட்டி 7

## எண்ணாகமம் 17 முதல் 36 வரை

**வசன ஆதாரத்துடன் விடையளிக்கவும். –** *30 மதிப்பெண்கள்*

*1. “தேவனுடையது”, “கர்த்தருடையவைகள்” எவைகள் என குறிப்பிடவும்? (3)*
*2. “வெறுங்கையோடு வராமல்” என்ன கொண்டு வர வேண்டும்? (2)*
*3. “உன்னிடத்தில் கேட்கிறார்” யார்? எதை? (2)*
*4. “பலியிட வேண்டாம்” எதை? யாருக்கு? (2)*
*5. அ. “கண்டேன்”, “பயந்திருந்தேன்” யார்? எதை? எதற்கு? (2)*
*ஆ. “கேட்டார்” யார்? எதை? (1)*
*6. “நடந்து போங்கள்” என்று கட்டளை பெற்றவர்களின் பெயர்களை குறிப்பிடவும். எப்படி? எவர்கள் முன்? (3)*
*7. அ. “மகா சத்தத்துடனே சொன்னார்” யார்? யாருக்கு? எங்கிருந்து? (2)*
*ஆ. அவர் சொன்ன வார்த்தைகள் இடம் பெறும் வேதபகுதியை மட்டும் குறிப்பிடவும். (1)*
*8. பெலனை உனக்குக் கொடுக்கிறவர் யார்? எதற்கு? எதின்படி? (2)*
*9. ஒன்றும் “கூட்டவும், குறைக்கவும் வேண்டாம்” எதனோடே? (2)*
*10. பின்வரும் வசனங்களை எழுதவும்.*
*அ. “அவரே” என துவக்கமும் முடிவும் உள்ள வசனம். (2)*
*ஆ. “தேவன்” என முடியும் வசனங்கள். (4)*
*11. “பேசுவீர்களாக” எவைகளை? யாருக்கு? எப்போது? (2)*

## வேதாகம போட்டி – எண் 5
## (லேவியராகமம் 1 முதல் 27 வரை) விடைகள்:

*1. அக்கினி, சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும், ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள் (9:24)*
*2. அக்கினி, நாதாப் மற்றும் அபியூ, அந்நிய அக்கினியை கொண்டு வந்தபோது (10:1,2)*
*3. ஆத்துமா (16:31), இரத்தம் (17:11)*
*4. கர்த்தருடைய கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளுகிறவன், கர்த்தருடைய கட்டளைகள் மற்றும் நியாயங்கள் (18:4,5)*
*5. முதிர் வயதுள்ளவர்கள், நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, தேவன் (19:32)*

6. கர்த்தர், கர்த்தருடையவர்களாய் இருப்பதற்காக (20:26)
7. நியாய விசாரணை, அளவு, நிறை, படி (19:35)
8. அபிஷேக தைலம் என்னும் கிரீடம், பிரதான ஆசாரியன் (21:1–12)
9. ஆரோன், பரிசுத்தமான குத்துவிளக்கின் மேல் இருக்கிற விளக்கு, ஆசரிப்பு கூடாரம் (24:3,4)
10. நுகத்தடிகள், நிமிர்ந்து (26:13)
11. தகனபலியில் உள்ள கொழுப்பு முழுவதும், (3:16)தலையீற்றானவைகள் (27:26), தசமபாகம், (27:30) பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் (27:2)
12. 6 வகை பலிகள் (7:37) (பலிகள் அடங்கிய பிற வசன ஆதாரங்களும் சரியானவை)
13. செலோமித்தின் மகன், கர்த்தரின் நாமத்தை (24:11)
14. 6, 7. (20:8, 21:8, 15, 23, 22:9, 16, 32)
15. உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள் (20:7)

## வேதவினா போட்டி 5 இல் முழு மதிப்பெண் பெற்றவர்கள்:

1. Sis. Rani Jeyapal - Nazareth
2. Sis. Milkal Sam - chennai
3. Sis. Jeeva Nesamani - Coimbatore
4. Sis. W. Grace - Nilgiris
5. Sis. Saroja Pandian - Chennai
6. Sis. Janci - Nagercoil
7. Sis. Sharon Refiner - Nazareth
8. Sis. Gnanam John - Thirupur
9. Sis. Rama Sam - Srivilliputhur
10. Sis. Selvi - Ayappakkam
11. Sis. Sheeba J - Chennai

## Raffle prize winner: Sis. Gnanam John - Thirupur

**போட்டியில் கலந்து கொண்ட அனைவரையும்**
**வெற்றியின் ஊழியங்கள் சார்பாக அன்போடு வாழ்த்துகிறோம்.**

(குறிப்பு: பிரியமானவர்களே, சிலருடைய பதில்களில் குறைவான விளக்கம் காணப்படுகிறது. எனவே வசனங்களை இரண்டு முறை நன்கு படித்த பிறகு பதில்களை குறிப்பிடவும்)

★ பிரியமானவர்களே, வேத வினாப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் வசன ஆதாரத்தோடு தெளிவாக பதில்களை எழுத வேண்டும்.
★ ஒவ்வொரு மாதமும் அம்மாத இறுதிக்குள் விடைகளை எங்களுக்கு அனுப்ப வேண்டும்.
★ பதில்களை தபால் மூலமாகவோ அல்லது வாட்ஸ்அப் மூலமாகவோ அனுப்பலாம்.

தபால் முகவரி:
**சகோ. ஜான் ஜோசப்**
**97, லாமேக் தெரு, ஜானகி நகர், வளசரவாக்கம், சென்னை 87.**
**வாட்ஸ்அப் எண்: 97890 54777**




■ சகோதரி சுமிதா

# பட்டு கிட்டுவின் வீடுகள்!

ஒரு பெரிய தோப்புல இரண்டு குருவிகள் வாழ்ந்து வந்தன. ஒரு குருவி பெயர் பட்டு. மற்றொரு குருவி பெயர் கிட்டு. இந்த இரண்டு குருவிகளும் தங்களுக்கு அழகான வீடு கட்டலாம் என்று திட்டமிட்டனர்.

பட்டு, வாழை மரம் கிட்ட போய், "வாழை அண்ணே! வாழை அண்ணே! நான் உங்க மேல ஒரு வீடு கட்டிக் கொள்ளட்டுமா?" என்று கேட்டது. அந்த வாழை மரமும் இடம் கொடுத்தது. பட்டு தன் வீட்டை கட்ட வைக்கோல், நூல் போன்ற soft ஆன பொருட்களை தேர்ந்தெடுத்தது. தன் வீடு மிருதுவாகவும் கதகதப்பாகவும் இருக்கணும்னு அப்படி செய்தது, பட்டு.

கிட்டு, மாமரம் கிட்ட "மா அண்ணே! மா அண்ணே! நான் ஒரு வீடு கட்டிக்கொள்ள எனக்கு இடம் கொடுக்குறீங்களான்னு" கேட்டுச்சாம். அந்த மரமும் "கட்டிக்கோ தம்பி" என்று சொல்லுச்சாம். கிட்டு தன் வீட்டுக்கு குச்சிகளையும் கயிறுகளையும் தெரிந்து கொண்டு, மாமரக் கிளைகளின் இடையில்

குச்சிகளை அடுக்கி, அதை கயிறுகளால் இறுக்கமாக கட்டி, தன் வீட்டை நிறைவு செய்தது. பட்டுவும் கிட்டுவும் தங்களுக்காககட்டியவீடுகளில் வாழ தொடங்கினார்கள்.

சில நாட்கள் சென்ற பின்பு, கடுமையான சூறாவளி ஒன்று வந்துச்சு. பட்டுவும் கிட்டுவும் தங்களை பாதுகாத்து கொள்ளும் படி, தங்கள் வீடுகளுக்குள் சென்று அடைந்தனர். ஆனால் அந்த சூறாவளி பலத்த வேகத்தோடு வீசியது. பல மரங்கள் காற்றில் வேரோடு சாய்ந்து போயின. இந்த கடுமையான காற்றில் பட்டுவின் வீடும் பறந்து விட்டது. பட்டு வாழை மரத்தை அண்டிக் கொண்டது. சில நிமிடங்களில் அந்த வாழை மரமும் முறிந்து விழ, என்ன செய்வதென்று தெரியாமல் பட்டு தவித்து கொண்டிருந்தது.

ஆனால், கிட்டு வீடு கட்டிய மாமரம் உறுதியாக நின்றது. கிட்டுக்கட்டிய வீடும் அசையவில்லை. பட்டுவின் நிலையை கண்ட கிட்டு, பட்டுவை தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இருவரும் மாமரத்து குச்சி வீட்டில் பத்திரமாக தங்கி கொண்டனர். கடும் சூறாவளி காற்றிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

பிள்ளைகளே, அந்த காற்றின் தாக்கத்தை மாமரம் எதிர்கொண்டு நிலைத்து நின்றது. அதுபோல நம் வாழ்வில் வீசும் பல சூறாவளி காற்றுகளை எதிர்கொள்ள நமக்கு ஒரு துணை வேண்டும். அது கிறிஸ்துவே. நாமும் நம்முடைய நம்பிக்கையை கிறிஸ்துவின் மேல் வைத்தால் என்ன நடந்தாலும் நமக்கு பயமே இருக்காது. என்ன போராட்டம் வந்தாலும் நாம் விழாமல் இருப்பதோடு, நம்மை சார்ந்த மற்றவர்களையும் காப்பாற்றிக் கொள்ளலாம்.

கற்பாறையின் மேல் தன் வீட்டை கட்டுகிறவன் புத்தியுள்ளவன் என்று வசனம் (மத்தேயு 7:24) கூறுகிறது. எனவே, கற்பாறையான இயேசு கிறிஸ்துவின் மேல் நாம் நம் நம்பிக்கையை வைத்து, நம்மையும் நம்மை சார்ந்தவர்களையும் காத்துக்கொள்வோம். உலகமும் அதில் உள்ளவைகளும் அழிந்து போகும். கிறிஸ்துவே என்றென்றும் நிலைத்திருப்பார்.

# உங்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்!

பிரியமானவர்களே! நம் வெற்றியின் ஊழியங்களை உங்கள் ஜெபங்களினாலும், காணிக்கைகளினாலும் இந்த 29 வருடமும் தாங்கி உங்கள் அன்பை காண்பித்து வருகிற உங்கள் ஒவ்வொருவருக்காகவும் என் மனமார்ந்த நன்றிகள்! தொடர்ந்து ஒரு நாளைக்கு 10 நிமிடமாவது எனக்காக, என் குடும்பத்திற்காக, ஊழியங்களுக்காக ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். நன்றி!

**கிறிஸ்துவின் பணியில், உங்கள் சகோ. ஜான் ஜோசப்.**

---

*சென்னை விருகம்பாக்கத்தில்*

**வெற்றியின் ஊழியங்களின்**

## 29வது ஆண்டு விழா ஸ்தோத்திர கூட்டம்



### 2024, செப்டம்பர் 28

சனிக்கிழமை காலை 10 மணி முதல் 2 மணி வரை

*(கூட்டம் முடிந்ததும் யாவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்)*

**இடம் : வெற்றியின் ஊழியங்கள்**

எண் 83. காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம், சென்னை 600 092

**தொடர்புக்கு : 9282191333**

*வாருங்கள் நாம் ஒருமித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம்!*
*உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்!*

---

# பிரியமானவர்களே!



★ நமது ஊழியத்தின் மூலம் நாம் இதுவரை 32 சபைகளை (10 கி.மீ சுற்றளவில் சபைகள் இல்லாத கிராமங்களில்) கட்டி பிரதிஷ்டை செய்துள்ளோம்.

★ இப்போதும் 12 சபைகள் கட்டப்பட்டு வருகிறது. இது செப்டம்பர் மாதத்திற்குள் கட்டி பிரதிஷ்டை செய்யப்படும்.

★ இவ்வாண்டுக்குள் இன்னும் 8 சபைகள் (மொத்தம் 50 சபைகள்) கட்டி முடிக்க அதிக ஜெபத்தோடு பிரயாசப்படுகிறோம்.

**நீங்கள் உங்கள் குடும்பத்தின் சார்பாகவோ, சபையின் சார்பாகவோ ஒரு ஆலயத்தை கட்ட தீர்மானிப்பீர்களா?**

உடனே எம்மை **9444129940** என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

நன்றி – ஆ.ர்

Posted between 2-6 September 2024
R.Dis.No.2200/12
RNI No. TNTAM/2013/52167
Postal Registration Number: TN/CC(S) DN/483/23-25
WPP. No.: TN/PMG(CCR)/WPP387/23-25

## சென்னையில் ஒரு நாள்

# தலைமைத்துவ பயிற்சி முகாம்

**2024 செப்டம்பர் 20**
வெள்ளிக்கிழமை
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

**வெற்றியின் ஊழியங்கள்**
எண் 83. காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம்,
சென்னை 600 092.

மேய்ப்பர்கள், சபை தலைவர்கள், ஜெப குழு தலைவர்கள், ஸ்தாபன தலைவர்கள் கலந்துக்கொள்ளலாம்.

பயிற்சி அளிப்பவர்:
**சகோ. ஜான் ஜோசப்**



முன்பதிவு கட்டாயம் செய்ய வேண்டும்
**9282191333**

பதிவு கட்டணம் ரூ.200/-
மதிய உணவு தேனீர் வழங்கப்படும்

*[குறிப்பு: ஊழியங்களில் ஈடுபடாதவர்களுக்கும், சிறுவர்களுக்கும் அனுமதி இல்லை]*

Date of Publication - First Week of Every month
Registered News Paper, Posted at: Egmore RMS/1 (Patrika Channel)

If Undelivered Please return to
**R. John Joseph**
Victorious Ministries,
# 97, Lamech Street, Janaki Nagar,
Valasaravakkam,
Chennai - 600 087.
**Ph: 044 - 2486 3381**
**Mobile: + 91 92821 91333**

Vetriyin Satham owned and published by: **R. John Joseph Navajeev**
From: No 97, Lamech Street, Janaki nagar, valasaravakkam, Chennai - 600087.
**Ph: 044-2486 3381**
Printed by: R.John Joseph Navajeev at Aakash Art Printers
#5, Venkataraman Salai, MGR Nagar, Chennai - 600 078
Editor, **R.JOHN JOSEPH NAVAJEEV**

*Prem Graphics, 9095784996*